சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **126/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | தேவதாஸ் |
| தந்தை பெயர் | : | கேசவன் |
| கிராமம் | : | மன்னார்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 60 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது, வலங்கைமான் காவல் நிலையத்தி காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2025 ம் தேதி திருமக்கோட்டை காவல்

நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, மன்னார்குடி தலைமை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 கஜேந்திரன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து, மனு ரசீது எண் 208/2025 எண்ணிடப்பட்டு, மேற்படி மனு ரசீது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மனு விசாரணைக்கு பிறகு 04.06.2025 ம் தேதியன்று காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் குற்ற எண் 26/2025 ச/பி. 191 (2), 296 (b), 115(2), of BNS r/w Sec. 3(1)(r), 3 (1)(s) and 3(2)(va) of SC/ST (PoA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கின் வாக்குமூலத்தை இணைத்து தஞ்சாவூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்திற்கு மற்ற நகல்களையும், சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 01.06.2025 ம் தேதி என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தேதி 04.06.2025 ம் தேதி என்றாலும் சரிதான். 3 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.1 என்னிடம் கொடுத்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும், நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தினை யாரும் நேரிட்டு பார்த்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரி காரில் வந்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில், மேற்படி கார் என்னவகை மற்றும் கார் பதிவு எண் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் நான் புகார் வாக்குமூலம் மட்டும்தான் பெற்றேன் என்றாலும், மற்ற சாட்சி விசாரணைகள் அனைத்தும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களே மேற்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 என்னிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில், நடந்ததாக சொல்லப்படும்

சம்பவத்தின்போது, எதிரியுடன் இணைந்து மேலும் 4 நபர்கள் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடத்திற்கே செல்லாமலும், போடப்பட்ட பொய்யான முதல் தகவல் அறிக்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 சொன்ன வகையில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.26 18:09:03 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.